பொன்னெழில் ஆதித்யா

ஏழைக் குழந்தைளுக்கு கம்ப்யூட்டர் கோடிங் கற்பிப்பதே என் லட்சியம்!

அசத்தும் அனிதா ராமன்

தூத்துக்குடியில் பிறந்து வளர்ந்து, தற்போது பெங்களூருவில் வசிக்கும் அனிதா ராமன், தகவல் தொழில்நுட்பத்துறையில் 17 ஆண்டுகள் அனுபவம் உள்ளவர். கிராமப்புறக் குழந்தைகளுக்கும் கம்ப்யூட்டர் புரோகிராமிங் பற்றித் தெரிய வேண்டும் என்ற நோக்கத்தில் சேவை மனப்பான்மையோடு வகுப்புகளை நடத்திவருகிறார்.

குழந்தைகளுக்கு கம்ப்யூட்டர் புரோகிராமிங் வகுப்புகளை நடத்த வேண்டும் என்று தோன்றியது எதனால்?

"நாம் பயன்படுத்தும் எல்லா சாதனங்களின் இயக்கமும் கம்ப்யூட்டர் புரோகிராமிங்கில் அடங்கியிருப்பதால், அது அத்தியாவசியக் கல்வியாக மாறி வருகிறது. நான் பல நிறுவனங்களுடன் பணிசெய்யும்போது ஒரு விஷயத்தைக் கவனித்தேன். குழந்தைகளுக்கு கம்ப்யூட்டர் புரோகிராம் சொல்லிக் கொடுக்க இந்தியாவில் நிறைய புதுப்புது நிறுவனங்களைத் தொடங்கிக்கொண்டே இருந்தார்கள். ஆனால், அதற்கான கட்டணம் மிக அதிகமாக இருந்ததை நான் கவனித்தேன். அப்படியெனில் அது மேல்தட்டு மக்களின் குழந்தைகளுக்கு மட்டுமே கிடைக்கும் என்பதை நான் உணர்ந்தேன். இதனால், நடுத்தர மற்றும் அடித்தட்டு குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் புரோகிராம் என்றால் என்னவென்றே தெரியாமல் பொறியியல் படிக்கச் செல்வார்கள். அங்கேயும் அவர்களால் எதையுமே கற்றுக்கொள்ள முடியாமல் பாடப்பை முடித்தும் வேலை கிடைக்காமல் கஷ்டப்படுவார்கள். அதனால் ஷேர் டெலிவரி செய்வது போன்ற, கிடைக்கும் வேலைகளைச் செய்வார்கள். எனவே, 'புரோகிராமிங் எல்லா குழந்தைகளுக்கும் போய்ச் சேர வேண்டுமென்றுதான் நான் இந்தப் பணியைத் தொடங்கினேன். பள்ளிக் குழந்தைகளுக்கு தமிழிலேயே சொல்லிக் கொடுக்க முடிவெடுத்தேன். ஒரே ஆண்டில்

பெண்கள் சிறப்பிதழ்

உலகம் முழுவதும் பல நாடுகளில் உள்ள தமிழ் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் வாய்ப்பு கிடைத்தது."

இந்தப் பயிற்சியைப் பெறுவதால் என்ன பயன்?

"இதனால் கல்லூரியில் சேரும்போது 'நமக்கு பொறியியல் வேணுமா? வேணாமா' என்று தெரிந்துகொண்டு சரியாக அவர்கள் முடிவெடுப்பார்கள்."

கிராமப்புற மாணவர்களுக்கும் கணினி தொழில்நுட்பத்தைக் கொண்டு சேர்க்க எப்படி உதவுகிறீர்கள்?

"வருமானமாக பார்க்காமல் சேவையாகப் பார்க்கும் பயிற்சியாளர்களைக் கண்டு பிடித்து, குழந்தைகளுக்குக் குறைந்த கட்டணத்தில் தரமான படிப்பைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறோம். வெறும் 800 ரூபாய் மாதாந்திர கட்டணத்தில் சொல்லிக் கொடுப்பது மிகவும் கடினம். ஏனெனில், அதிக அனுபவம் மிக்க தரமான பயிற்சியாளர்கள் குறைந்த கட்டணத்தில் சொல்லிக்கொடுக்க வரமாட்டார்கள். ஆனால், அவர்களை இதை ஒரு சேவையாக பாருங்கள் என்று சொல்லித்தான் செய்ய வைக்கிறோம்."

உங்களின் எதிர்காலத் திட்டம் என்ன?

"வெறும் பாடமாக சொல்லிக் கொடுப்பதை செய்முறையாக சொல்லிக் கொடுத்து, நம்பிக்கை நிறைந்த பல்லாயிரம் பிள்ளைகளைத் தயார் செய்ய வேண்டும். என்னைப் பார்த்து இன்னும் பலரும் குறைந்த கட்டணத்தில் ஏழைக் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்க முன்வரச் செய்ய வேண்டும்."

உங்களைப் பற்றியும் குடும்பம் பற்றியும் தெரிஞ்சுக்கலாமா?

"நான் பிறந்து வளர்ந்தது எல்லாமே தூத்துக்குடியில்தான். அப்பா ராமன் பேருந்து நடத்துநரா இருந்தார். அம்மா லீலா குடும்பத் தலைவி. கணினி அறிவியலில் பொறியியல் படிப்பை முடித்தவுடன் பெங்களூரு வந்துவிட்டேன்.. என் கணவர் உளரும் பெங்களூருதான். கணவர் தகவல் தொழில் நுட்ப நிறுவனத்தில் பணி செய்கிறார்."